**மாலிம்பட பிரதேச சபை**

**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மே 03 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுன் 16 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவெம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய மாலிம்பட பிரதேச சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மாலிம்பட பிரதேசசபையின் நடவடிக்கைகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு அச்செயற்பாட்டு நடவடிக்கைகளினது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்குகிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 87,874,929 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 797,709 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,570,612 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன.

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 534 | 537 | 100 |
| (ii) | குத்தகை வாடகை | 1,899 | 1,480 | 98 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 429 | 390 | 45 |
| (iv) | பிற வருவாய் | 4,733 | 4,156 | 25,834 |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 115,800 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,530,000 |

### 2.2.3 தொலைபேசிக் கோபுரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெலிஜ்ஜவில நாகன்தகொடவத்த – தொலைபேசிக் கோபுரத்தை நிர்மாணித்தல்

(i) கோபுரத்தை நிர்மாணிப்பதற்குச் சபையால் அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை. எனினும், அத்தொலைபேசிக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை 2012 ஜுன் 01 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின் அவதானிக்கப்பட்டது.

(ii) நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபையின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 05 ஆம் பகுதியினது 6(v) க்கமைய, சபையின் அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்ட 40 மீட்டர் உயர கோபுரத்திற்கு ரூபா 80,000 கட்டணமாக அறவிடப்பட வேண்டுமாயினும் ரூபா 30,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(iii) மத்திய சுற்றாடல் அதிகாரசபைப் பணிப்பாளரது 2008 ஜுலை 02 ஆந் திகதிய கடிதம் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபைப் பணிப்பாளரது 2008 ஜுன் 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கோபுரக் கம்பங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் முன்கூட்டிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும், கோபுரத்தை நிர்மாணித்த நிறுவனம் அதனைப் புறக்கணித்திருந்தது.

(iv) தலைவரின் 2009 ஜுலை 15 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கோபுரத்தை நிர்மாணிப்பது சட்டபூர்வமானதல்ல என்பதால் நிர்மாண வேலையை நிறுத்தி நிர்மாணிக்கப்பட்டவற்றைத் தகர்த்து அகற்றுமாறு குறித்த கம்பனிக்கு அறிவித்தபோதும், 2012 ஜுன் 01 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனைச் சந்தர்ப்பத்திலும் அதற்கமைய செயற்படவில்லை.

(ஆ) பொல் அரம்பேகொட தொலைபேசிக் கோபுரம்

பொல் அரம்பேகொடஹேன தொலைபேசிக் கோபுரத்தின் 60 மீட்டர் உயரத்திற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணம் ரூபா 24,000 ஆகும். எனினும், ரூபா 22,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 கடை வாடகை

பின்வரும் அவதானிப்புரை மேற்கொள்ளப்படுகின்றது.

(i) மாலிம்பட பொதுச் சந்தையில் உள்ள 22 கடைகள் மற்றும் தெலிஜ்ஜவில பொதுச் சந்தையில் உள்ள 5 கடைகள் என்பவற்றிற்கு 2012 ஆம் ஆண்டிற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை.

(ii) கடைகள் விலைமதிப்பீட்டுக்குள்ளாகி 5 ஆண்டுகளாகிவிட்ட போதும், விலைமதிப்பீடு திருத்தத்திற்குள்ளாகவில்லை.

(iii) தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது 2010 செப்தெம்பர் 27 ஆந் திகதிய தெஉ_ஆ/உ_ஆ/2010/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் கடைகளைக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3 மனிதவள முகாமைத்துவம்

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 26 ஆகும். உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 44 ஆகும். பின்வரும் அவதானிப்புரை மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டினது வருமான, செலவினக் கணக்கின் பிரகாரம் பதவியணியினரின் சம்பளம் மற்றும் அங்த்தவர் படி என்பவற்றிற்கான செலவினம் ரூபா 7,976,993 ஆகும். எனினும், உள்ளூராட்சி ஆணையாளரால் மீளளிப்புச் செய்யப்பட்ட தொகை ரூபா 6,198,720 ஆகும். எனவே, வித்தியாசமான ரூபா 1,778,273 சபை நிதியத்திற்குச் சுமையாக அமைந்தது.

(இ) திறைசேரிச் செயலாளரது 2002 ஜனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கைகள் இலக்கம் 14 மற்றும் இலக்கம் 28 க்கமைய உள்ளூராட்சி நிறுவனங்களது சமயாசமய, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களை ஆட்சேர்ப்பது இடைநிறுத்தப்பட்டுள்ள போதும், அவ்வேற்பாடுகளுக்கு முரணாக 18 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சபையின் நிதியிலிருந்து சம்பளமாக ரூபா 1,453,983 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச்சுற்றறிக்கை அறிவுறத்துரைகளை மீறும் வண்ணம் ஆட்சேர்க்கப்படுவதாயின் நிறுவனத் தலைவர் அதற்குத் தனிப்பட்ட விதத்தில் பொறுப்புடையவர் ஆவார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சபை ஊழியர்களிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டி ஊழியர் கடன் ரூபா 28,132,295 ஆகும்.

## 2.4 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

### வீதி விளக்குப் பராமரிப்பு

(i) சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள இலங்கை மின்சார சபையால் அங்கீகரிக்கப்பட்ட வீதிவிளக்குகளின் எண்ணிக்கை 90 ஆகும். எனினும், 1050 விளக்குகள் பொருத்தப்பட்டு மின்சாரத்துக்கும் துணைப் பாகங்களுக்கும் ரூபா 269,892 செலவிடப்பட்டிருந்தது.

(ii) சபை பராமரிப்புக்காச் செலவிட்ட தொகை ரூபா 285,942 ஆகும். இலங்கை மின்சார சபை மீளளிப்புச் செய்த தொகை ரூபா 36,036 மாத்திரமே இதனால் சபைக்கு மேலதிக செலவினச் சுமையாக அமைந்த தொகை ரூபா 249,906 ஆகும்.

## 2.5 செயற்திறன்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளைக் காட்டும் ஒன்றிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) 2007 தொடக்கம் 2010 வரையான நான்காண்டுகாலத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படவில்லை.

(i) அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றும் வேலைகள் மாத்திரமே சுட்டிக் காட்டப்பட்டிருந்தபோதும், ஒவ்வொரு வேலைக்கும் இலக்கிடப்பட்ட செலவினம், அது நிறைவேறும் காலப் பகுதி என்பன உள்ளடக்கப்படவில்லை.

(ii) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட 29 கிராம உத்தியோகத்தர் பிரிவும் உள்ளடங்கும் விதத்தில் பங்குபற்றல் திட்டக்குழு மற்றும் 29 உப குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளபோதும், அக்குழுக்கள் செயற்பட்டமைக்கான தகவல்கள் இருக்கவில்லை.

(iii) பின்வரும் விடயங்களை நிறைவேற்ற இலக்கிடப்பட்டபோதும், அவை நிறைவேறியதை உறுதி செய்யும் முன்னேற்ற அறிக்கைகள் தயாராகவில்லை.

- சுகாதார மற்றும சுகாதார நடவடிக்கைச் சேவை
- பௌதிக உட்கட்டமைப்பு வசதிகள்
- சமூக சேவை
- பொருளாதார அபிவிருத்தி, முதலீடு மற்றும் சுற்றாடல்

(இ) சபை கொள்வனவுத் திட்டமொன்றைத் தயாரிக்கவில்லை.

**2.6 சபை அங்கத்தவர் முன்மொழிதல்களும் முன்னேற்றமும்**

(i) ஒன்பது அங்த்தவர்களைக் கொண்ட சபை மீளாய்வாண்டில் அங்கத்தவர் சம்பளமாகச் செலவிட்ட தொகை ரூபா 618,000 ஆகும். 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற 12 கூட்டத்தொடர்களில் 8 அங்கத்தவர்கள் மாத்திரமே கலந்து கொண்டனர்.

(ii) மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவினத்தின் கீழ் சபை அங்கத்தவர்களது வேலை முன்மொழிதல்கள் உள்ளடக்கப்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட 58 வேலை முன்மொழிதல்களில் 39 மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன.

(iii) மூன்றாண்டுத் திட்டத்தின் கீழ் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அமுலாக்கப்படவிருந்த 17 அபிவிருத்திச் செயற்திட்ட வீதிகள் மற்றும் 8 பிற முன்மொழிதல்கள் எனச் செயற்திட்ட நிரலொன்று வரவு செலவுத்திட்டத்தில் காணப்பட்டபோதும் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியைச் சுட்டிக்காட்டாததுடன் அவற்றில் ஒரு செயற்திட்டமேனும் அமுலாகவில்லை.

**2.7 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு